# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1996/30 - 2016 දෙසැම්බර් මස 07 වැනි බදාදා - 2016.12.07

1996/30 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

தொடர்பிலக்கம்.: MCUDP/ CMC/ MD/ CA/ P4
தொடர்பிலக்கம்.: 4-3/ 8/ 2015/ PC/ 252

கொழும்பு தலைநகரை அண்டிய மாநகர அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற உப செயற்றிட்டம் ஒன்றான மருதானை பகுதியில் அமைந்துள்ள நொரிஸ் கெனல் ஆற்றை அகலமாக்கி அபிவிருத்தி செய்வதற்காக கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு பிரதேச செயலக பிரிவில் சுதுவெல்ல கிராம சேவைப் பிரிவுக்குச் சொந்தமான மருதானை கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2016.11.24 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் கொ 9669 உடைய ஆரம்ப வரைபடத்தின் இலக்கங்கள் 1, 2 மற்றும் 3 என தயாரிக்கப்பட்டுள்ள விஸ்தீரணம் 0.0217 ஹெக்டயாரைக் கொண்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள காணித் துண்டுகள்.

**துண்டு இல. 1**

காணியின் பெயர்: ரீ. பி. ஜயா மாவத்தை, வரிப்பணம் இல. 338 (ஒரு பகுதி); விபரம்: வீட்டுத்தோட்டம், நிரந்தரமான 02 கட்டிடங்களின் பகுதிகள் மற்றும் காவல் அறை; உரிமை கோருபவர்: தெரியாது; விஸ்தீரணம்: 0.0002 ஹெக்டயார்.

**துண்டு இல. 2**

காணியின் பெயர்: ரீ. பி. ஜயா மாவத்தை, வரிப்பணம் இல. 338 (ஒரு பகுதி); விபரம்: வீட்டுத்தோட்டம், நிரந்தரமான 02 கட்டிடங்களின் பகுதிகள் மற்றும் காவல் அறை; உரிமை கோருபவர்: தெரியாது; விஸ்தீரணம்: 0.0001 ஹெக்டயார்.

**துண்டு இல. 3**

காணியின் பெயர்: ரீ. பி. ஜயா மாவத்தை, வரிப்பணம் இல. 338 (ஒரு பகுதி); விபரம்: வீட்டுத்தோட்டம், நிரந்தரமான 02 கட்டிடங்களின் பகுதிகள் மற்றும் காவல் அறை; உரிமை கோருபவர்: தெரியாது; விஸ்தீரணம்: 0.0214 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு கொழும்பு மாநகர சபையில் அமைந்துள்ள எனது அலுவலகத்தில் என்முன்பாக தோன்றும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வீ. கே. ஏ. அனுர,
மாநகர ஆணையாளரும்
கொழும்பு மாநகர சபையின்
அதிகாரங்கள் மற்றும் கருமங்களை
நடைமுறைப்படுத்தும் அதிகாரி
கொழும்பு மாநகர சபை.

12 - 862


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.